செ.வெ.எண்-44 நாள்-20.03.2021

**அரியலூர் மாவட்டம்**

# முதல் தலைமுறை வாக்காளர்களிடையே 100 சதவீதம் வாக்களிப்பது குறித்த விழிப்புணர்வு மாரத்தான் போட்டியினை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.த.ரத்னா, இஆப., அவர்கள் கொடியசைத்து துவக்கி வைத்தார்கள்.

இந்திய தேர்தல் ஆணையத்தின் ஆணைப்படி, **சட்டமன்ற பொதுத்தேர்தல் 2021-ஐ** முன்னிட்டு தேர்தலில் 100 சதவீதம் வாக்காளர்கள் வாக்களிக்க வேண்டுமென வலியுறுத்தி பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்த உத்தரவிற்கிணங்க, அரியலூர் மாவட்டத்தில் பல்வேறு வாக்காளர் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

மேலும், அரியலூர் மாவட்டத்தில் வாக்காளர் விழிப்புணர்வு குறித்து பல்வேறு துறைகளின் சார்பில் தப்பாட்டம், கரகாட்டம், மாடாட்டம், ஓவிய கோலம் வரைதல், விழிப்புணர்வு பேரணி, மனித சங்கிலி, ஒலிபெருக்கி வாகனம் மூலம் விழிப்புணர்வு பிரச்சாரம், வணிக வளாகங்கள் மற்றும் எருவாயு உருளைகளில் விழிப்புணர்வு ஒட்டுவில்லைகள் ஒட்டுதல், துண்டு பிரசுரங்கள் வழங்குதல், 100 சதவீதம் வாக்களிப்போம் மற்றும் தேர்தல் நாள் வடிவில் பள்ளி மாணவ, மாணவிகள் அமர்ந்து விழிப்புணர்வு ஏற்படுத்துதல் மற்றும் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் அதிநவீன மின்னணு விளம்பரத்திரை வாகனம் மூலம் அனைத்து கிராமங்களிலும் சென்று விளம்பர படக்காட்சிகள் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்துதல் போன்ற பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகிறது.

அதன்படி இன்று (20.03.2021) மாவட்ட விளையாட்டு அரங்கில், இளந்தலைமுறை வாக்காளர்களிடையே 100 சதவீதம் வாக்களிப்பதன் அவசியம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் 1000-க்கும் மேற்பட்ட நபர்கள் கலந்துகொண்ட மினி மாரத்தான் போட்டியினை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இஆப.,** அவர்கள் கொடியசைத்து துவக்கி வைத்தார்கள். முன்னதாக, வாக்காளர் விழிப்புணர்வு உறுதிமொழியினை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தலைமையில், அனைத்து நபர்களும் உறுதிமொழியினை ஏற்றுக்கொண்டனர்.

மாரத்தான் போட்டியில் கலந்துகொண்ட இளைஞர்கள் அனைவரும் வாக்களிப்பதன் அவசியம் குறித்தும், cVIGIL செயலி மூலம் தேர்தல் நடைத்தை விதிமீறல்கள் தொடர்பான புகார்கள் அளிப்பது தொடர்பாகவும், மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் குறித்தும் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் அனைவரும் டீ-சர்ட் அணிந்து முக்கிய வீதிகள் வழியாக சுமார் 4 கிலோ மீட்டர் தூரத்தை கடந்து இறுதியாக மாவட்ட ஆட்சியரகத்தை அடைந்தனர்.

இப்போட்டிகளில் வெற்றிப்பெற்ற இளைஞர்களுக்கு பாராட்டுச்சான்றிதழ் மற்றும் பதக்கங்களை மாவட்ட ஆட்சியர் அவர்கள் வழங்கினார்கள். மேலும், வாக்களிப்பதன் அவசியம் குறித்து இளைஞர்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் மூத்த குடிமக்களும் மற்றும் மாற்றுத்திறனாளிகளும் இந்த விழிப்புணர்வு மாரத்தான் போட்டியில் கலந்துகொண்டு சிறப்பித்தனர். அவர்களுக்கும் மாவட்ட ஆட்சியர் அவர்கள் பாராட்டு சான்றிதழ்களை வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் வீ.பாஸ்கரன், மாவட்ட வருவாய் அலுவலர் இரா.ஜெய்னுலாப்தீன், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் தியாகராஜன், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் க.சரவணன், மாவட்ட மாற்றுத்திறனாளி நல அலுவலர் இ.பொம்மி, மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர் ஜெயக்குமார் ராஜா, மற்றும் அலுவலர்கள், இளைஞர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**